**O.S. No.370/2021**
**P.W.1 - திரு.சிவபிரகாஷ்**
**நாள் : 25.02.2026.**

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியும். எனக்கு தற்போது வயது 31 ஆகும். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது எனக்கு வயது 27 என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும், எனது அம்மாவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து பெற்றுள்ளார்களா என்றால், பெற்றுள்ளார்கள். விவாகரத்து பெற்ற சம்மந்தமாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்கும் தகப்பனாருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெறப்பட்டதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி உத்தரவின் அடிப்படையில் என் தந்தையிடமிருந்து ஜீவனாம்ச தொகை பெறவில்லை. மேற்படி ஜீவனாம்ச தொகை பெறுவதற்கு நாங்கள் எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனது தந்தை, தாயார் மற்றும் நாங்கள் சுமூகமாக இருப்பதால் தான் ஜீவனாம்ச தொகை பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், விவாகரத்து எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்துகொண்டதாக பிராது தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்திருந்ததில் அந்த பாகப்பிரிவினை எப்போது, எப்படி எனக்கு தெரிய வந்தது என்ற விபரம் பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால், எனக்கு தெரியாது. மேலும் 2008ம் வருடம் ஏற்பட்ட **வா.சா.ஆ.3** பாகப்பிரிவினையின் அடிப்படையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களுக்கு கிடைத்த பாகச்சொத்தை அவரவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தனி தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். வழக்கு சொத்தை நாங்கள் அனுபவிக்கவில்லை. வழக்கு சொத்துக்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். A அட்டவணை சொத்தில் 11வது இலக்க சொத்து மற்றும் 12 வது இலக்க

சொத்தை பொறுத்து 6ல் 1 பங்கு என குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் மீதமுள்ள 5 பாகம் என் தாத்தாவுடன் பிறந்த ஐந்து பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஐந்து பங்காளிகளை இந்த வழக்கில் சேர்த்து தான் பாகப்பிரிவினை மேற்படி A அட்டவணை சொத்தில் 11வது இலக்க சொத்து மற்றும் 12 வது இலக்க சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை கோர இயலும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி A அட்டவணை சொத்தில் 3வது சொத்து மற்றும் 13வது சொத்தும் எனது தந்தை வழி தாத்தாவின் தாயார் எனது தந்தை வழி தாத்தாவிற்கு தானமாக கொடுத்த சொத்து என்றால் எனக்கு தெரியாது. மேற்படி A அட்டவணை சொத்தில் 3வது சொத்து மற்றும் 13வது சொத்துக்களை பொறுத்து எனது தாத்தாவின் சகோதரர் வழக்கு தாக்கல் செய்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் வரை சென்று வழக்கு முடிந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. B அட்டவணை சொத்தில் கண்டுள்ள 3 முதல் 5 இலக்க சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது சொத்து என்று பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. மேற்படி B அட்டவணை சொத்தில் கண்டுள்ள 3 முதல் 5 இலக்க சொத்துகளுக்கு மொத்தம் ஏக்கர் 1 செண்டு 4 வடபுறம் 40 நீங்கலாக மீதமுள்ள தென்புறம் செண்டு 64 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வடபுறம் உள்ள 40 செண்டு யார் பெயரில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. மேற்படி வடபுறம் உள்ள 40 செண்டு நிலத்தை எனக்கும், எனது சகோதரிக்கும் எனது தகப்பனார் தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வடபுறம் உள்ள 40 செண்டு சொத்தை எனது தகப்பனாரிடம் தானமாக பெற்று பட்டா மாறுதல் செய்த நாங்கள் அனுபவித்து வருவதால் அந்த சொத்தை இந்த வழக்கில் வழக்குச்சொத்தாக காட்டவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக மேற்படி வடபுறம் உள்ள 40 செண்டு நீங்கலாக என்று பிராதில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. A அட்டவணை சொத்தில் 10ம் இலக்க சொத்து எங்கள் குடும்பத்தின் கோவில் சொத்து என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால், எனக்கு

தெரியாது. எனது பாட்டி முத்துபிள்ளையும், எனது அத்தை 5ம் பிரதிவாதி அய்யம்மாளும் கடந்த 14.09.2005ம் தேதி **வா.சா.ஆ.5** விடுதலை பத்திரம் மூலம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அவர்களுடைய மொத்த குடும்ப சொத்துகளில் உள்ள உரிமையை விடுதலை செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். ஆனால் தற்போது இந்த வழக்கில் அந்த விடுதலை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். மேற்படி விடுதலை பத்திரம் எனது தகப்பனாருக்கும் சேர்த்து தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரம் மூலம் தானம் கொடுத்திருப்பதில் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும் இந்த வழக்கில் குழப்பதை ஏற்படுத்துவதற்காக மேற்படி விடுதலை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாமல் நீதிமன்ற கட்டணத்தை குறைவாக கட்டி வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் எனவே வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் என்னையும், என் தாய்யையும் மற்றும் என் சகோதரியையும் விட்டுவிட்டு அவர் அண்ணன் தம்பியுடன் இருந்து வருகிறார். எனது தகப்பனார் குடியிருக்கும் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே இரண்டு வீடுகள் தான் உள்ளது. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் அனைவரும் சுமூக உறவோடு இருந்துகொண்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் மீது வழக்கு பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னுடைய தந்தை வழி தாத்தாவின் உடன் பிறந்தவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எங்களுக்கு எனது தந்தை தானம் கொடுத்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் 1 முதல் 5 பிரதிவாதிகள் தனி தனியாக அவர்கள் பெயரில் அவர்களுடைய பணத்தைப்பயன்படுத்தி வாங்கிய தனிப்பட்ட சொத்துகள் என்றும் அந்த சொத்துக்களுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

எனவே அதில் பாகம் கோரும் எங்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி 2008ம் வருட **வா.சா.ஆ.3** பாகப்பிரிவினை சட்டப்படி நடைபெற்றது என்றும், அதன்படி எனது தந்தைக்கு எந்த பாக சொத்தோ அதில் மட்டுமே உரிமை கோர முடியும் மற்ற சொத்துக்களில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. மேலும் நான் காலம்கடந்து என்னுடைய 27 வயதில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 5 பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை** : இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.25 16:47:08 +0530